# கல்லூரி வரலாறு

தஞ்சை அரசினர் மகளிர் கலைக்கல்லூரி 1966 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. வரலாற்றுச் சிறப்புமிக்க தஞ்சை அரண்மனைக் கட்டிடத்தில் மூன்று புதுமுக வகுப்புகளைக் கொண்டு செயலாற்றத் தொடங்கியது. 1969 ஆம் ஆண்டு முதல் பட்ட வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. ( அட்டவணை காண்க).

1970 ஆம் ஆண்டு புதியதாகக் கட்டப்பட்ட சொந்தக் கட்டிடத்திற்குக் கல்லூரி மாற்றப்பட்டது. சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்திருந்த இக்கல்லூரி 1982 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழக ஆட்சி எல்லைக்குள் வந்தது.

1984 ஆம் ஆண்டு இராசராச சோழனின் 1000-வது முடிசூட்டு விழாவினைக் கொண்டாடிய தமிழக அரசு இக்கல்லூரிக்கு **“குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக்கல்லூரி,”** தஞ்சாவூர் எனப் பெயர் மாற்றம் செய்து ஆணை பிறப்பித்தது. புகழ்பெற்ற மாமன்னனான இராஜராஜசோழனின் தமக்கை வழிகாட்டி மற்றும் ஆலோசகரான இளவரசி குந்தவையை நினைவூட்டும் விதமாக இக்கல்லூரிக்கு இப்பெயரிடப்பட்டது.

இக்கல்லூரியில் 3.9.83 அன்று சுயநிதி அடிப்படையில் மாலை நேரக் கல்லூரியில் பொருளியல், வணிகவியல், ஆங்கில இலக்கியம் பாட வகுப்புகளுடன் ஆரம்பிக்கப்பட்டன. 1990 ஆம் ஆண்டு தமிழ் இலக்கியப் பாட வகுப்பும் ஆரம்பிக்கப்பட்டது.

நவம்பர் 2004 இல் கல்லூரிக்குத் தன்னாட்சி அங்கீகாரம் வழங்கப்பட்டது. 2004 - 2005 ஆம் கல்வி ஆண்டு முதல் பாரதிதாசன் பல்கலைக்கழகச் சுயநிதிப்பிரிவில் ஒரு இளநிலை வகுப்பும், ஆறு முதுநிலை வகுப்பும் தொடங்கப்பட்டன. 2005 - 2006 ஆம் கல்வி ஆண்டில் மேலும் ஒரு இளம் அறிவியல் பாடப்பரிவும், இரண்டு முதுநிலை பாடப்பிரிவுகளும் தொடங்கப்பட்டன.

தேசிய தர நிர்ணயக்குழு (NAAC) நம் கல்லூரியை நான்கு முறை ஆய்வு செய்து 2000 – ஆம் ஆண்டில் மூன்று நட்சத்திர தகுதி, 2006 – 2007 ல் B+ தகுதி, 2013-14ல் B தகுதி, மற்றும் 2018 - 2019 ல் B தகுதியை வழங்கியுள்ளது.

# HISTORY OF THE COLLEGE

Thanjavur Government Arts College for Women has been started in the year 1966. At the start, it was functioning with three diploma / certificate courses. Degree courses have been started in the year 1969.

In 1970, the college was shifted to the new permanent building. In the beginning, it was under the affiliation of University of Madras and then affiliated to Tiruchirappalli Bharathidasan University in the year 1982.

At the day of Raja Raja Chola's Thousandth Year Coronation, Tamil Nadu Government has passed the G.O. for christening the college as Kunthavai Naachiyaar Govt. Arts College for Women to commemorate Princess Kunthavai - sister, mentor and counsel of the Great King Raja Raja Chola.

In 03.09.1983, degrees such as Economics, Commerce and English Literature had been started on the basis of Self - financing. Tamil Literature hed been started in the year 1990. In November 2004 College obtained Autonomous status. From the academic year 2004 - 2005 onwards, one UG Programme and six PG Programmes were started under Self-financing section. In the academic year 2005-2006, additionally one UG Science Programme and two PG Programmes have been started.

The college has gone through four cycles of NAAC visits. Accredited in the year 2000 (with 3star status), Reaccredited in 2006-07 (with B+ status) and then in the years 2013-14 and 2018-19 (with B status).